d) மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மை என்று உறுதி அளித்து எனது விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படின் ஒன்றிய ஒப்பந்த நிபந்தனைகளுடன் கூடிய வரைமுறைகளுக்குட்பட்டு எனது வாகன பதிவு எண். ……………………..ஐ **<u>”பாண்லே” பால்/ பால்பொருட்கள், ஐஸ்கீரிம் வகைகள் மற்றும் இதர பொருட்களை</u> <u>பாலகங்களுக்கு /முகவர்களுக்கு</u> <u>விநியோகம் செய்யும் பணிக்காக</u>** ஒப்பந்த அடிப்படையில் …………….வழிதடத்திற்கு வாடகைக்கு இயக்க முழு மனதுடன் சம்மதிக்கிறேன்.

**ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் கையொப்பம்**

## பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
## வழுதாவூர் ரோடு, குருமாம்பேட், புதுச்சேரி-605009.
## தொலைபேசி எண். 0413-2271607, 2272202.

**ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பூர்த்தி செய்வதற்கு உரிய வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகள்.**

**ஒரு ஒப்பந்தப்புள்ளி படிவம் ஒரு வழித்தடத்திற்கு (மார்க்கத்திற்கு) மட்டுமே உபயோகம் செய்திடல் வேண்டும்.** ஒன்றிற்கு மேற்பட்ட வழித்தடத்திற்கு உபயோகப்படுத்தினால் ஒப்பந்தப்புள்ளி படிவம் நிராகரிக்கப்படும். மேலும், இணைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி படிவங்களை நன்றாக படித்து அதன்படி பூர்த்தி செய்யவேண்டும்.

1. அண்மையில் எடுக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் கலர் புகைப்படம் ஒன்றை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டி கையொப்பமிடல் வேண்டும்.

2. ஒப்பந்தம் கோரப்பட்டுள்ள ஒப்பந்ததாரரின் விபரம் மற்றும் வாகன விபரங்களை நன்றாக படித்து அதன்படி பூர்த்தி செய்ய வேண்டும்.

3. விலைப்புள்ளி கோரும் இடத்தில் விலைப்புள்ளியினை குறிப்பிட்டு (அனைத்து செலவுகளும் உட்பட) தவறாமல் கையொப்பமிடுதல் வேண்டும்.

4. வாகனத்தின் அனைத்து ஆவணங்களின் நகல்கள், முன் வைப்புத்தொகை (EMD) ரூபாய் 10,000/- கேட்பு வரைவோலையாக (DD) மற்றும் **கையொப்பம் இட்ட ஒப்பந்த விதிமுறைகள் & நிபந்தனைகளை** ஒப்பந்த படிவத்துடன் இணைக்கப்படாவிட்டால் டெண்டர் நிராகரிக்கப்படும்.

5. ஓப்பந்தப்புள்ளி படிவத்தை கவரில் வைத்து மூடி, சீலிட்டு உறையின் மேல்பகுதியில் கீழ்காணும் பெறுநர், முகவரி மற்றும் வழித்தடத்தின் பெயரை தெளிவாக தவறாமல் குறிப்பிடவேண்டும்.

மேலாண் இயக்குனர்,
பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்.,
குருமாம்பேட், புதுச்சேரி-605009.

| | | |
|---|---|---|
| (அ) ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கு | - | 07.09.2021 |
| கடைசி நாள் மற்றும் நேரம் | - | மாலை 4.00 மணிவரை |
| (ஆ) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் | - | 08.09.2021 |
| சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் | - | பிற்பகல் 3.00 மணிவரை |

(இ) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவு அஞ்சல் ஒப்புதலுடன் அலுவலகத்திற்கு வந்து சேர்வதற்கான கடைசி நாள் 08.09.2021 பிற்பகல் 3.00 மணிவரை மட்டுமே. அதற்கு பின்னர் வரும் படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது. அஞ்சல் தாமதத்திற்கு ஒன்றியம் பொறுப்பாகாது. பதிவு அஞ்சல் மூலம் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி குழுவினரால் திறக்கும்பொழுது ஒப்படைக்கப்படும்.

(ஈ) நேரடியாக அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை சேர்க்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரர்கள் 08.09.2021 தேதி அன்று அலுவலகத்தில் வைக்கப்படும் அதற்கான பெட்டியில் 3:00. மணி வரை நேரடியாக சேர்க்கலாம்.

6. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் அடங்கிய டெண்டர் கவர் குழுவினரால் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம். }: 08.09.2021 பிற்பகல் 3.30 மணி அளவில்

(அ) ஒப்பந்தப்புள்ளி படிவம் திறக்கப்படும் இடம்: மேலாண் இயக்குநர்
பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்
ஒன்றியம் லிட்.,
குருமாம்பேட், புதுச்சேரி-605009.

(ஆ) ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரர்கள் / பிரதிநிதிகள் முன்னிலையில் ஒப்பந்த குழுவினரால் பிரிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

(இ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நாளில் ஒப்பந்தப்பணி மேற்கொள்ளும் வாகனத்தின் **அனைத்து ஆவணங்களும் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரரின் பெயரில் நடைமுறையில் அவசியம் இருத்தல் வேண்டும்.** அன்றைய தேதியில் அவ்வாறு இல்லையெனில் படிவம் தகுதியற்றது என்று நிராகரிக்கப்படும்.

7. **முன் வைப்பு தொகை வரைவோலையாக (DD) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்**

அ) முன் வைப்பு தொகை ரூ. 10,000/- (EARNEST MONEY DEPOSIT) **பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., குருமாம்பேட், புதுச்சேரி.** என்ற பெயருக்கு புதுச்சேரியில் மாற்றத்தக்கவகையில் கேட்பு வரைவோலையாக (Demand Draft) சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும். இவ்வாறாக சமர்ப்பிக்கப்படும் வரைவோலைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். **(பண ஆணை, அஞ்சல் ஆணை, காசோலைகள் ஏற்கப்படமாட்டாது).**

8. **ஒப்பந்த காலம் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தப்பணி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளாகும்.**

9. எந்த ஒரு ஒப்பந்த புள்ளியை ஏற்கவோ / மறுக்கவோ / நிராகரிக்கவோ மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தொடர்பாக பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மாற்றம் செய்யவோ நிராகரிக்கவோ பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய மேலாண் இயக்குனர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.

மேலாண் இயக்குனர்

**2021-2023 ஆம் ஆண்டிற்கான டெண்டரில் இரண்டு ஆண்டு காலத்திற்கு பாண்லே பாலகங்களுக்கு/ முகவர்களுக்கு பால்/பால்பொருட்கள்/ஐஸ்கிரீம் வகைகள் மற்றும் இதர பொருட்களின் விநியோக வழித்தட வாகன ஒப்பந்தத்திற்கான கால வரையறைகளும் நிபந்தனைகளும்:**

1. **ஒப்பந்த வாகனத்தின் வடிவமைப்பு (MODEL)**

   01.01.2010 முதல் மற்றும் அதற்கு மேல் தயாரிக்கப்பட்ட மாடல் வாகனங்கள் மட்டுமே தகுதியானதாகும்.

2. டெண்டர் படிவத்துடன் முன் **வைப்புத் தொகை (Earnest Money Deposit)** ரூ.10,000/-னை மேலாண் இயக்குனர், பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் லிட்., என்ற பெயரில் கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் புதுச்சேரியில் மாற்றத்தக்கதாக இவ்வொன்றியத்தில் செலுத்த வேண்டும்

3. **முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தப்படாத டெண்டர் படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

4. ஒப்பந்த காலம், ஒப்பந்தப்பணி வழங்கும் தேதியில் இருந்து இரண்டாண்டு காலம் ஆகும். ஒப்பந்தக் காலம் முடிவுற்று அடுத்த வாகன ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை அல்லது ஆறு மாதங்கள் வரை இவற்றுள் எது முந்தையதோ அதுவரை ஒப்பந்தக் காலத்தை நீட்டிக்க இவ்வொன்றியத்திற்கு அதிகாரம் உண்டு.

5. ஒப்பந்த ஆணை கிடைத்தவுடன் **பிணைய வைப்புத்தொகையாக** ஒரு வழித்தடத்திற்கு ரூபாய் 30,000/- ஒப்பந்தம் கிடைக்கப்பெற்ற ஏழு தினங்களுக்குள் ஒன்றியத்தில் செலுத்த வேண்டும். பிணைய வைப்புத் தொகைக்கு எவ்வித வட்டியும் தரப்பட மாட்டாது.

6. எந்த ஒரு டெண்டரையும் ஏற்றுக்கொள்வது என்பது மட்டுமே ஒப்பந்தம் ஆகாது. பிரத்யோகமாக ஒப்பந்த படிவத்தில் இருதரப்பினரும் கருத்துகளையும் நிபந்தனைகளையும் புரிந்துகொண்டு விலைப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்ட 10 தினங்களுக்குள் ரூ.100/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் (e-stamp) தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னரே ஒப்பந்தம் முழுமை பெற்றதாக கருதப்படும்.

7. இரு தரப்பினரும் ஒப்பந்தத்தை எக்காரணம் கொண்டும் ஒப்பந்த காலத்தின் இடையில் முறித்துக்கொள்ள விரும்பினால் ஒரு மாதகால முன்னறிவிப்பு கொடுத்து அவ்வாறு செய்து கொள்ளலாம். இருப்பினும், ஒப்பந்ததாரர் அவராக முன்வந்து முடித்துக்கொள்ள விரும்பினால் பிணையத்தொகை 50% இழக்க நேரிடும்.

8. ஒப்பந்ததாரர், ஒன்றியம் குறிப்பிடும் வங்கியில் சேமிப்பு கணக்கு ஆரம்பித்து வங்கிக் கணக்கு எண்ணை இவ்வலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

9. விநியோக வழித்தடத்திற்கு ஏற்றவாறு நாளொன்றுக்கு மூன்று அல்லது இரண்டு வேளைகள் அல்லது ஒரு வேளை மட்டும் வாகனம் இயக்கப்பட வேண்டும்.

10. **வாகனங்கள் இயக்கப்படாத நாட்களுக்கு வாகன வாடகை அளிக்கப்படமாட்டாது.**

11. ஒப்பந்ததாரர் தமது சொந்த பொறுப்பில் ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு உதவியாளரை பணிக்கு அமர்த்தி பால் டப்புகள் / பால் பொருட்கள் / இதர பொருட்கள் முதலியவற்றை ஏற்றவும், அனைத்து பாலகங்கள்/ முகவர்களுக்கு விநியோகம் செய்யவும் அதற்குறிய ஒப்புதல் சான்றுகளை சரிவர ஒப்படைக்கவும் கடமைப்பட்டவர்கள் ஆவார்.

12. ஒப்பந்ததாரர் வாகனத்தில் பணிபுரியும் ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு உதவியாளரின் புகைப்படத்துடன் பெயரை முன்கூட்டியே எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு ஒப்பந்ததாரரால் நியமிக்கப்பட்ட ஓட்டுநர் மற்றும் உதவியாளருக்கு ஒப்பந்தாரரே அடையாள அட்டை வழங்க வேண்டும். அடையாள அட்டை வைத்திருக்கும் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் மட்டுமே பால் பண்ணைக்குள் அனுமதிக்கப்படுவார்கள். மேலும், ஓட்டுநர் மற்றும் உதவியாளர் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும், வாகனம் ஓட்டுபவர் ஓட்டுநர் உரிமம் (Driving License) பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

13. **பால் / பால் பொருட்கள் / இதர பொருட்கள் விநியோகம் செய்யும் ஒப்பந்த வாகனம் பற்றிய தகவல்கள்:**

அ. ஒப்பந்த வாகனமும் அதில் பணிபுரியும் ஊழியர்களும் மோட்டார் வாகனச் சட்டத்திற்கும் அதில் அவ்வப்போது செய்யப்படும் மாற்றங்களுக்கும் உட்பட்டு இருக்க வேண்டும்.

ஆ. ஒப்பந்தப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பதிவு எண் கொண்ட வாகனம் மோட்டார் வாகனக் காப்பீட்டுச் சட்டத்தின்கீழ் ஒப்பந்தக் காலத்திற்கு முழு காப்பீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இ. **பாலகங்களுக்கு பால்/இதர பொருட்கள் ஏற்றிச்செல்லும் வாகனத்தின் மேற்புறம் கூண்டு போன்ற அமைப்புடன் உலோகத்தால் (அல்லது) தார்பாயால் மூடப்பட்டு பால் டப்புகள்/இதர பொருட்கள் மீது வெயில் மற்றும் மழைநீர் படாமல் ஏற்றிச்சென்று பாலகங்களுக்கு விநியோகம் செய்யும் நிலையில் கட்டாயம் இருத்தல் வேண்டும்.**

ஈ **பாலகங்களுக்கு / முகவர்களுக்கு பால்பொருட்கள் ஏற்றிச்செல்லும் வாகனமானது பால்பொருட்கள் மீது வெயில் மற்றும் மழைநீர் படாமல் இரும்பு உலோகத்தால் முழுவதும் மூடப்பட்டு பின்பக்க கதவுடன் இருத்தல் வேண்டும்.**

உ முகவர்களுக்கு இயக்கப்படவேண்டிய விநியோக வழித்தட வாகனத்தில் **1500 Ltr** கொள்ளவு உள்ள கிளைக்கால் வசதியுடன் கூடிய ஐஸ்கிரீம் குளிர்சாதன பெட்டி (மின்சாரத்தில் இயங்கக்கூடியது) **ஒன்று அல்லது** கொள்ளளவுக்கு இணையான பாலகங்களுக்கு இயக்கப்படவேண்டிய (விநியோக வழித்தட எண்.12) வாகனத்தில் **1000 Ltr** கொள்ளளவு உள்ள கிளைக்கால் வசதியுடன் கூடிய ஐஸ்கிரீம் குளிர்சாதன பெட்டி (மின்சாரத்தில் இயங்கக்கூடியது) **இரணடு அல்லது** கொள்ளளவுக்கு இணையான சொந்தமாக வைத்திருத்தல் வேண்டும். மேலும், முகவர்களுக்கு/பாலகங்களுக்கு வாகனத்தை இயக்கும்போது 4 முதல் 5 மணி நேரம் வரை 18°C to - 20°C குளிர் நிலையில் இருக்கும் திறன் உள்ளதாக இருத்தல் வேண்டும்.

ஊ மேலும் **இக்குளிர்சாதனப் பெட்டியை விற்பனை அலுவலர்கள் தெரிவிக்கும் நேரத்திற்கு பால் பண்ணையில் Charge செய்திடல் வேண்டும்.**

14. வாகனங்களின் நான்கு புறங்களிலும் ''பாண்லே ஒப்பந்த வாகனம்'' என்று பெரிய எழுத்துக்களில் தெளிவாக எழுதப்பட வேண்டும். இத்துடன் பாண்லே பால்/பால் பொருட்கள் விளம்பர பதாகையும் வண்டியில் இருபுறமும் இணைத்து இருத்தல் வேண்டும்.

15. ஒப்பந்ததாரருக்கு வாடகை முன்பணம் அல்லது வேறுவித முன்பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது.

16. ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டபின் ஒப்பந்த வாகனம் செல்லும் பாதை, நிறுத்தவேண்டிய இடங்கள் மற்றும் நேரம் முதலியனவற்றை மாற்றம் செய்யும் முழு அதிகாரம் ஒன்றியத்திற்கு உண்டு. ஒப்பந்ததாரரோ அல்லது அவரது வாகன ஊழியர்களோ அவர்களாக எவ்வித மாற்றமும் செய்திட அனுமதிக்கப்படமாட்டாது.

17. ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்ததாரர் நேரத்துடன் வாகனங்களை ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு உதவியாளருடன் பால் பண்ணையில் குறித்த நேரத்தில் லோடிங் செய்ய தயார் நிலையில் வாகனத்தை நிறுத்த வேண்டும். வாகனம் காலதாமதமாக வருவதாலோ அல்லது உதவியாளர் இல்லாமல் வண்டிகளை அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டாலோ அதனால் ஏற்படும் வியாபாரக்குறைவு கணக்கிடப்பட்டு அத்தொகை ஒப்பந்த வாடகையில் பிடித்தம் செய்யப்படும்.

18. மேலும், காலதாமதாக வாகனம் வந்து இயக்கப்பட்டால் வேளை ஒன்றுக்கு ரூ.250/- அபராதக்கட்டணம் வாடகையில் பிடித்தம் செய்யப்படும்

19. பால் பண்ணையில் எந்த வழித்தட வாகனம் முதலில் லோடிங் செய்ய வேண்டும் என்றும், எந்த இடத்தில் நின்று லோடிங் செய்ய வேண்டும் என்றும் அலுவலகம்தான் முடிவு செய்யும். பாண்லே அதிகாரிகளின் உத்தரவுப்படி வாகன பணியாளர்கள் லோடிங் செய்ய வேண்டும். வாகன பணியாளர்களின் விருப்பப்படி லோடிங் பாயிண்ட் மற்றும் நேரம் மாற்றி அமைக்க அனுமதி கிடையாது.

20. ஒவ்வொரு ஒப்பந்ததாரரின் பால் / பால்பொருட்கள் / இதர பொருட்கள் விநியோக வாகனங்கள் பால் பண்ணையிலிருந்து புறப்படும் நேரம், திரும்பிவரும் நேரம், பால் பண்ணைகேட் காவலர் பதிவேட்டில் இருந்து சேகரிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் தெரிவிக்கப்படும். இதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்கள் அவர்களது பணியாளர்களை உஷார்படுத்தி நேரத்தை கடைபிடிக்க உறுதி செய்ய வேண்டும்.

21. பாலக / முகவர்கள் விநியோக வழித்தடத்தில் வாகனம் செல்லும்போது வழியில் நிறுத்தி சோதனை செய்ய ஒன்றியத்திற்கு முழு உரிமை உண்டு.

22. பாலக / முகவர்கள் விநியோகப் பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர்கள் அவர்களது வாகனத்தில் பணிபுரியும் நபர்களிடம் பாண்லே விற்பனைப்பிரிவு மற்றும் பால் பண்ணையில் பணிபுரியும் அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் கட்டளைப்படி பணிபுரியவேண்டும் என்று அறிவுறுத்துவதுடன் பணியாளர்கள் அவ்விதமாக நடந்துகொள்கின்றார்களா என்பதை அவ்வப்பொழுது ஆய்வு செய்திடல் வேண்டும்.

23. ஒப்பந்த வாகனத்தில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் இருவரும் பால்பண்ணையில் பால்/பால்பொருட்கள்/ஐஸ்கிரீம் வகைகள் மற்றும் இதர பொருட்களை சரிபார்த்து காலம் தாழ்த்தாமல் வண்டியில் ஏற்றவேண்டும். அதன்பிறகு ஏற்படும் குறைவுகளுக்கு ஒன்றியம் பொறுப்பேற்காது.

24. பால் பண்ணையில் பால்/பால்பொருட்கள் டப்புகளை ஓட்டுநர் மற்றும் ஒரு உதவியாளருடன் மேடையிலிருந்து வாகனத்தில் ஏற்றும்போது லீக் பாக்கெட்டுகள் இல்லாமல் சேதம் இல்லாமல் பால் / பால் பொருட்களின் எண்ணிக்கையை சரி பார்த்து ஏற்ற வேண்டும்.

25. ஒப்பந்ததாரர், ஒப்பந்த வாகனத்தில் கிளீனர் (உதவியாளர்) ஒருவரை கண்டிப்பாக பணியில் அமர்த்த வேண்டும். தவறினால் நாளொன்றுக்கு ரூ.250/- அபராதம் விதிக்கப்படும்.

26. பால் வண்டியில் கிளீனர் (உதவியாளர்) பால் வண்டியின் பின்புறம் அமர்ந்திருக்கவேண்டும். பால் மற்றும் பால்பொருட்களின் டப்புகள்/கேன்கள் சாய்ந்து விடாமல் கவனித்து கொள்ளவேண்டியது அவரது பொறுப்பாகும். ஒன்றிய அலுவலரின் உத்தரவிற்கு கட்டுப்பட்டு பணியாளர்களை மாற்றி அமைக்க ஒப்பந்ததாரர் தயாராக இருக்கவேண்டும்.

27. ஒப்பந்ததாரரின் காலதாமத விநியோகம் காரணமாக கெட்டுப்போன பால் / பால்பொருட்கள்/இதரபொருட்களின் கிரயத்தொகை பால்/பால்பொருட்கள் / இதர பொருட்கள் விற்பனை விலையின் அடிப்படையில் ஒப்பந்ததாரரின் போக்குவரத்துக் கட்டணத்தில் வசூலிக்கப்படுவதுடன் அபராதமும் விதிக்கப்படும்.

28. ஒப்பந்த வாகனம் மூடப்படாத நிலையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் பாலகங்களுக்கு / முகவர்களுக்கு பால் / பால்பொருட்கள்/ இதர பொருட்கள் ஒப்படைத்திருந்தாலும் அதில் ஏதேனும் கெட்டு விட்டால் அதற்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார்.

29. (A) ஒப்பந்ததாரர், பால் பண்ணையிலிருந்து பால்/பால்பொருட்கள் கேன்/டப்புகள் மற்றும் காலி டப்புகள்/கேன்களை வண்டியில் ஏற்றவும்/இறக்கவும் தனது சொந்த பொறுப்பில் நபர்களை நியமித்துக் கொள்ளவேண்டும்.

(B) பால்/பால்பொருட்களின் டப்புகள், காலி டப்புகளை கையாளும்போது பால் டப்புகளில் ஏற்படும் இழப்புகளுக்கும், சேதங்களுக்கும், குறைவுக்கும் ஒப்பந்ததாரரே முழுப்பொறுப்பாவார்.

30. **ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததாரரின் விநியோக வழித்தடத்தில் வாகனம் இயக்கும் தூரத்தை கூட்டவோ, குறைக்கவோ அல்லது மாற்றி அமைக்கவோ ஒன்றியத்தின் மேலாண் இயக்குனருக்கு முழு அதிகாரம் உண்டு.**

31. பாலகங்களுக்கு/முகவர்களுக்கு விநியோக வழித்தடங்களின் கால நேரங்களை மாற்றியமைக்கும் உரிமை ஒன்றியத்திற்கு உண்டு.

32. ஒப்பந்த காலத்தில் ஒப்பந்ததார் ஒப்பந்த வழித்தடத்தில் பால் / பால்பொருட்கள் / இதர பொருட்களை வேறு வாகனத்தின் முலம் மாற்றம் செய்து இயக்கும் பட்சத்தில் டெண்டரை ரத்து செய்ய மேலாண் இயக்குனருக்கு அதிகாரம் உண்டு.

33. ஒப்பந்ததாரர் தமது வாகனங்களை பால்பண்ணை வளாகத்தில் நிறுத்தி சுத்தம் செய்யவோ, வாகனத்தை கழுவுவதோ கூடாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில் ஒவ்வொரு முறைக்கும் ரூ.500/- அபராதம் விதிக்கப்படும்.

34. ஒவ்வொரு வேளையும் பால் / பால்பொருட்கள் / இதர பொருட்கள் ஏற்றிச் சென்று பாலகங்களுக்கு/முகவர்களுக்கு சேர்த்த பின்னர் வண்டியின் உள்புறம் / வெளிப்புறம் சுத்தமாகக் கழுவப்பட்டு நன்கு துடைக்கப்பட வேண்டும்.

35. ஒப்பந்ததாரர் இரண்டு விநியோக வழித்தடத்தின் பால் டப்புகள் மற்றும் பால் பொருட்களை ஒரே வாகனத்தில் ஏற்றி விநியோகம் செய்வது தெரிய வந்தால் ரூ.500/- அபராதமாக பிடித்தம் செய்வதுடன் ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும்.

36. ஒப்பந்ததாரர் ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்களை இயக்கும்போது எத்தடத்திலாவது இழப்புகள் ஏற்படுமாயின் அத்தடத்தில் ஈடு கட்ட இயலாத நிலையில் வாடகை மற்றும் இதர இழப்புகளை மற்ற வழித்தடத்தில் அவருக்கு வழங்கப்பட வேண்டிய தொகையிலிருந்து ஈடு செய்ய மேலாண் இயக்குனருக்கு அதிகாரம் உண்டு.

37. ஒப்பந்த வாகனம் பால் பண்ணையில் இருந்து பாலகங்களுக்கு/முகவர்களுக்கு சென்றடையும் போது பால்/பால் பொருட்கள்/ இதர பொருட்களில் ஏற்படும் அளவு மற்றும் தரம் குறைவிற்கு வாகன ஒப்பந்ததாரரே காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டால் ஒப்பந்த காலத்தில் அந்த வழித்தடத்தில் எற்பட்ட குறைவு அனைத்திற்கும் அவரே முழுப் பொறுப்பு என நிர்ணயிக்கபட்டு அதற்குண்டான முழுத்தொகையும் அவரிடம் வசூலிக்கப்படும்.

38. வாகன ஒப்பந்ததாரரின் பணியாளர்களான வாகன ஓட்டுநர் மற்றும் உதவியாளர்கள் பாலகங்களுக்கு பால் / பால் பொருட்கள் / இதர பொருட்களை இறக்கும்போது பாலகத்தை சுற்றியுள்ள சிமெண்ட்/ டைல்ஸ் தரைப்பகுதிகளுக்கோ மற்றும் பாலகத்தின் மேற்புறத்தில் அமைக்கப்பட்டுள்ள இரும்புக்கூரைக்கோ சேதம் அல்லது பாதிப்பு ஏற்படுத்தினால் உடனே சரிசெய்து தர வேண்டும். தவறினால் அதற்கான சரிசெய்யும் செலவினை வாகன வாடகையில் பிடித்தம் செய்யப்படும்.

39. போக்குவரத்து விதிகளுக்குட்பட்டு வாகனத்தை பராமரித்து இயக்குதல் ஒப்பந்ததாரரின் சொந்தப்பொறுப்பு ஆகும். போக்குவரத்து விதிகளில் ஒப்பந்ததாரரின் தவறுகள் ஒன்றியத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது, போக்குவரத்து விதிகளை சரிவர கடைபிடிக்காமல் வண்டி தாமதமானால் ஏற்படும் இழப்புக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பேற்க நேரிடும்.

40. வேலை நிறுத்தம், பந்த், போராட்டம், கலவரம், (மழைவெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்கள்) போன்றவற்றால் போக்குவரத்து தடைப்பட்டால் பால்/பால் பொருட்கள் விநியோகத்திற்கு மாற்றுப் பாதைகளை பயன்படுத்தி தம்முடைய சொந்தப் பொறுப்பில் பால்/பால் பொருட்கள் விநியோகம் செய்ய வேண்டியது ஒப்பந்ததாரரின் கடமையாகும்.

41. பால் / பால்பொருட்கள் / இதர பொருட்களை வண்டியில் பணிபுரிபவரோ (அ) அவர்களின் பிரதிநிதியோ திருடினாலோ, திருட முயற்சித்தாலோ ஒன்றியம் நிர்ணயிக்கும் அபராதம் மற்றும் தண்டனைக்கு ஒப்பந்ததாரரே முழு பொறுப்பாவார்.

42. **ஒன்றியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஒன்றியத்தைச் சார்ந்த பொருட்களைத் தவிர பிற வெளி நபர்களையோ, பொருட்களையோ பால் வண்டியில் ஏற்றிச் செல்லக்கூடாது. தவறினால் அன்றைய தின வாடகையைக் கோரும் தகுதியை ஒப்பந்ததாரர் இழந்தவராவார். இச்செயல் அடிக்கடி நிகழ்ந்தால் வாடகை இழப்போடு ஒப்பந்தமும் ரத்து செய்யப்படும்.**

43. ஒப்பந்த வாகனம் எதிர்பாராதவிதமாக பழுதடைந்தால், மாற்று வாகனம் உடனடியாக ஏற்பாடு செய்து உரிய காலத்தில் பால்/பால் பொருட்கள்/இதர பொருட்களை பாலகங்களுக்கு/முகவர்களுக்கு ஒப்படைக்க வேண்டியது ஒப்பந்ததாரரின் முழு பொறுப்பாகும். ஒப்பந்ததாரர் அதற்கான கூடுதல் தொகை எதுவும் கோரக்கூடாது.

44. எக்காரணத்தைக்கொண்டும் ஒப்பந்ததாரர்களின் பால்/பால்பொருட்கள்/இதர பொருட்கள் விநியோக வாகனங்கள் எரிபொருள் இல்லை என்று எங்கும் நிற்கக்கூடாது. அதன் காரணமாக பால்/பால்பொருட்கள்/இதர பொருட்கள் விநியோகம், காலதாமதமாகும் பட்சத்தில் முதல் இரண்டு சமயத்தில் **ரூ.**500/- மற்றும் ரூ.1000/- முறையே அபராதமாக பிடித்தம் செய்யப்படும். மூன்றாவது முறை தொடரும் பட்சத்தில் வாகன ஒப்பந்தத்தை ரத்து செய்யும் நோட்டீசுடன் அபராதத்தொகை ரூ.1000/- பிடித்தம் செய்யப்படும்.

45. பால் பண்ணையில் அளிக்கப்படும் Delivery Note-ன்படி பால்/பால்பொருட்கள்/இதர பொருட்களை பாலகங்கள்/முகவர்களுக்கு விநியோகித்து ஒப்பு கொண்டதற்கான அத்தாட்சிகளை ஒன்றியத்தில்/விற்பனை அலுவலகத்தில் ஒப்படைப்பது ஒப்பந்ததாரரின் பொறுப்பாகும்.

46. ஒப்பந்ததாரர், விநியோகத்திற்காக பெற்றுக் கொண்ட பால்/பால்பொருட்களின் டப்புகள்/கேன்களை விநியோகம் முடிவுற்றப்பின்னர் காலி டப்புகள்/கேன்களில் எவ்வித குறைவும் இன்றி அதே வேலையில் பால் பண்ணையில் ஒப்படைத்து அங்குள்ள பதிவேட்டில் ஓட்டுநர்/உதவியாளர் கையொப்பமிட வேண்டும். மேலும் குறைவு ஏற்படும் பட்சத்தில் டப்புகள்/கேன்கள் கிரையத் தொகையுடன் அபராதத்தொகையும் வசூலிக்கப்படும்.

47. பால் பண்ணையில் பாலகங்கள்/முகவர்களுக்கு விநியோகம் செய்வதற்கான விவரபட்டியல் சான்று மற்றும் பாக்கி இல்லா (No Dues) சான்று பெற்று 15 நாட்களுக்கு ஒரு முறை பில் தயாரித்து உரிய படிவத்தில் 3 நகல்களாக 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு 3 தினங்களுக்குள் பெறப்படும் பில்களுக்கு அடுத்துவரும் 15 தினங்களுக்குள் வாடகைத்தொகை பட்டுவாடா செய்யப்படும். தாமதமாக கொடுக்கப்படும் பில்களுக்கு காலம் தாழ்த்தி வாகன வாடகை பட்டுவாடா செய்யப்படும். காலதாமதம் ஏற்படின் ஒப்பந்ததாரர் நட்ட ஈடு கோர முடியாது.

48. ஒப்பந்ததாரரின் வண்டியில் பணிபுரியும் ஓட்டுநர் மற்றும் உதவியாளருக்கு ஒப்பந்ததாரர் சம்பளம் வழங்கும்போது சட்டபடி செலுத்த வேண்டிய EPF/ESI பிடித்தம் செய்து செலுத்துவது அவரது முக்கிய கடமையாகும்.

ஒப்பந்தாரர் ஒப்பந்தக்காலம் முடியும் முன்னரே வாகனத்தை நிறுத்திக்கொண்டால்,

அ) ஒப்பந்ததாரது பிணை வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்

ஆ) ஒப்பந்ததாரர் வாகனத்தை நிறுத்திக் கொண்ட தேதியன்று நிலுவையில் இருக்கும் போக்குவரத்துக் கட்டணம் விடுவிக்கப்பட மாட்டாது.

இ) அன்னாரது பெயர் இவ்வொன்றியத்தால் கறுப்பு பட்டியலில் வைக்கப்படும்

ஈ) மாற்று வாகனம் ஒன்றியத்தால் இயக்கப்படும்போது அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தைவிட அதிக கட்டணம் செலுத்தப்பட்டால் அத்தொகை ஒப்பந்ததாரரின் நிலுவையில் (அ) பிணைய வைப்புத் தொகையில் பிடித்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதையும்விட அதிக செலவினங்கள் இருப்பின் ஒப்பந்ததாரரின்மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு வசூல் செய்யப்படும்.

49. **ஒப்பந்த காலத்தில் வாகன வாடகை எக்காரணத்தைக் கொண்டும் மாற்றிக் கொடுக்கப்படமாட்டாது.** ஆயினும், எரிபொருள் விலை லிட்டர் ஒன்றுக்கு மாத சராசரி வித்தியாச அடிப்படையில் மத்திய அரசினால்/எண்ணெய் நிறுவனங்களால் உயர்த்தப்பட்டால் அல்லது குறைக்கப்பட்டால் மட்டுமே எரிபொருள் உபயோகத்தின் அடிப்படையில் ஒன்றியம் வாடகையை மாற்றி கொடுக்கும். இதன் இறுதி முடிவை ஒன்றியமே தீர்மானிக்கும்.

50. ஒப்பந்ததாரர் ஒப்பந்த வாகனம் பழுதடைந்த நேரத்தில் ஒன்றிய அனுமதியுடன் மாற்று வண்டி இயக்கும்போது ஏற்படும் இழப்புகளுக்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

51. கீழ்கண்ட சந்தர்ப்பங்களில் மட்டுமே மாற்று வாகனம் அல்லது மாற்று ஏற்பாடு அனுமதிக்கப்படும்.

அ). ஒப்பந்த வாகனம் பழுது ஏற்பட்டு இயக்க இயலாத நிலையில் ஒப்பந்ததாரர் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு மற்றும் மாடல் உள்ள மாற்று வாகனத்தை இயக்க அனுமதி வழங்கப்படும்.

ஆ). ஒப்பந்த வாகனம், விபத்து ஏற்பட்டு இயக்க இயலாத நிலை ஏற்படுமாயின் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அத்தாட்சிக் கடிதம் பெற்று ஆர்.சி., பர்மிட் தன் பெயரில் இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு மற்றும் மாடல் கொண்ட மாற்று வாகனத்தை ஒன்றியத்தின் முன் அனுமதி பெற்று இயக்கலாம்.

இ) ஒப்பந்ததாரர் அங்கீகரிக்கப்பட்ட வாகனத்தை மட்டும் தான் இயக்கவேண்டும். முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்க அனுமதியளிக்கப்பட மாட்டாது. முன் அனுமதியின்றி மாற்று வாகனம் இயக்கப்படுமாயின் நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அபராதம் விதிக்கப்படும். தவிர்க்க இயலாத காரணங்களான விபத்து, தகுதிச்சான்று பெறுதல் போன்ற சமயங்களில் மேலாண் இயக்குனரின் முன் அனுமதி பெற்று மாற்று வாகனம் இயக்கப்பட வேண்டும்.

52. காலம் தவறாமல் பால் / பால்பொருட்கள் / இதரபொருட்களை விநியோகம் செய்தலும், திரும்ப சேகரம் செய்த பொருட்களை குறித்த நேரத்திற்குள் பால் பண்ணையில் ஒப்படைத்தலும் வேண்டும் கால தாமதத்தால் ஏற்படும் இழப்பிற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவர்.

53. பாலகங்களுக்கு அருகில் உள்ள திருமண நிலையங்கள் / சுபநிகழ்ச்சி இடங்கள் மேலும் இதர, இடங்களுக்கு ஆடரின் பேரில் எடுக்கப்பட்ட பால் / பால்பொருட்கள் / இதர பொருட்களை உரிய நேரத்திற்கு விநியோகம் செய்தலும் மேலும் உரிய பொருட்களை சேகரித்து பால் பண்ணைக்கு ஒப்படைத்தலும் கடமைபட்டவர் ஆவார்

54. பாலகங்கள்/ முகவர்களின் எண்ணிக்கையை கூட்டவோ/குறைக்கவோ மேலாண் இயக்குனருக்கு முழு அதிகாரம் உண்டு.

55. தேர்ந்தெடுக்கப்பட்ட டெண்டர்தாரர் விற்பனை அலுவலகத்தில் அளிக்கப்படும் கால அட்டவணைப்படி பால்/பால்பொருட்கள்/விநியோகம் செய்ய வேண்டும்.

56. முகவர்களுக்கு/பாலகங்களுக்கு விநியோகம் செய்யும் வண்டியில் தேவையான குளிர்சாதனப் பெட்டியை ஒப்பந்தம் கிடைத்த 15 நாட்களுக்குள் பொருத்திட வேண்டும்.

57. ஒப்பந்ததாரர், அங்கீகரிக்கப்பட்ட கொள்திறன்/ மாடலுக்குக் குறைவான வாகனத்தை இயக்கினால் அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்படும்.

58. ஒப்பந்தக் காலம் முடிவடைந்ததுடன் ஒப்பந்தம் சார்ந்துள்ள அலுவலர்களிடம் பாக்கியில்லா சான்றுகள் (No Due Certificate) பெற்று சமர்ப்பித்த பின்னர் கடைசி வாகன வாடகை விடுவிக்கப்படும். பிணைய வைப்பு தொகை அவ்வாண்டிற்கான ஒன்றிய இறுதி தணிக்கை முடிவுற்ற பின்னர் விடுவிக்கப்படும்.

59. ஒப்பந்ததாரர் ஒப்பந்தக் காலத்தில் தனியார் பால்பண்ணையை ஊக்குவிக்கும் காரியங்களில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ ஈடுபட்டால் அவரின் ஒப்பந்தம் எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படுவதுடன் பிணை வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும்.

60. **இவ்வொன்றியத்தில் முந்தையக் காலங்களில் ஒப்பந்ததாரராக இருந்து அவ்வொப்பந்தக் காலத்தில் ஒப்பந்த விதிமுறைகளை மீறியமைக்காக ஒப்பந்த விதிகளின்படி ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டிருந்தால் அந்த ஒப்பந்ததாரர், நேரடியாகவோ, மறைமுகமாகவோ டெண்டரில் கலந்து கொள்ள இயலாது. பின்வரும் ஒப்பந்த காலத்தில் அவ்வாறு தெரிய வந்தால் ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படும்.**

61. ஒப்பந்ததாரர் அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமானவரி மற்றும் மற்ற வரிசட்டத்தின்படி அவரது வாடகைத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருமான வரித்துறைக்கு செலுத்தப்படும்.

62. வாகனம் முறைப்படி பதிவு செய்யப்பட்டு புதுவை, தமிழ்நாடு பகுதிகளில் இயங்கும் உரிமை பெற்றதாக இருக்க வேண்டும். ஒப்பந்ததாரர், விநியோக வழித்தடத்தில் இயங்கும் வாகனங்களின் பராமரிப்பு, வரி, காப்பீடு மற்றும் போக்குவரத்துச் சட்டம் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றை பின்பற்றி நடந்து கொள்ளுதல் வேண்டும். இவற்றால் ஏதேனும் இழப்பு ஏற்படின் அதற்கு ஒன்றியம் பொறுப்பாகாது. ஆனால், ஒன்றியத்திற்கு இழப்பு ஏற்படின் ஒப்பந்ததாரர் பொறுப்பாவார்.

63. ஒன்றிய மேலாண் இயக்குனரால் அவ்வப்போது வகுக்கப்படும் விதிமுறைகள்/வழிகாட்டுதல்களுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

64. **எந்த ஒரு ஒப்பந்தத்தையும் பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ மாற்றம் செய்யவோ நிராகரிக்கவோ பாண்டிச்சேரி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய மேலாண் இயக்குனர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.**

65. இவ்வொப்பந்தம் தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகள் புதுச்சேரி நீதிமன்ற வரம்புக்கு உட்பட்டது.

மேற்படி விநியோக வாகன ஒப்பந்த நிபந்தனைகள் அனைத்தையும் என்னுடைய சுயபுத்தி சுவாதீனத்துடனும், சுய நினைவுடனும் ஏற்று கையொப்பமிடுகிறேன்.